மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.

**முன்னிலை: திரு. A. சரவண செந்தில் குமார், B.Com., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீசோபகிருது வருடம் ஆவணி மாதம் 11–ம் நாள்
2023–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28–ம் நாள் திங்கள் கிழமை

**அசல் வழக்கு எண். 183 / 2022**
(Original Suit CNR No. TNTH06 000 273 2022)

ஜெயராம் :: வாதி

**/எதிர்/**

1. நந்தினி
2. வட்டாட்சியர் ,
 உத்தமபாளையம். :: பிரதிவாதிகள்

------

இவ்வழக்கு 15–09–2022–ம் தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டு 23–08–2023–ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. V. சரவணன், B.A., B.L., அவர்கள் ஆஜராகியுள்ளார். 2–ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு. K. போதுராஜா, B.Sc., B.Ed., B.L., அவர்கள் ஆஜராகியுள்ளார். 1–ம் பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட முடியாததன் காரணமாக மாற்று முக சார்புக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு தினசரி நாளிதழில் அறிவிப்பு வெளியிடப்பட்ட பின்னரும் 1–ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகததன் காரணமாக 1–ம் பிரதிவாதிக்கு எதிராக 24–04–2023–ம் தேதியன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், தோன்றா தரப்பினராக்கப்பட்டும், இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.08.29 04:57:44 +0530

## தீர்ப்புரை

கடந்த 29-09-2021-ம் தேதி இறந்துபோன செல்வம் அம்மாள் என்பவருக்கு வாதி சட்டப்படியான வாரிசு என்று விளம்புகை பரிகாரம் வழங்கக் கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்:**

வழக்குரை கொடி வழி ஜாபிதாவில் கண்டபடி ராமுகவுடர் – மாரியம்மாள் தம்பதிக்கு பெருமாள், கிருஷ்ணசாமி, செல்லம்மாள், கருணா ஆகிய நான்கு நபர்கள் வாரிசுளாக பிறந்துள்ளனர். ராமுகவுடர் – மாரியம்மாள் ஆகிய இருவரும் சுமார் 55 ஆண்டுகளுக்கு முன்பு வயது முதிர்வின் காரணமாக இறந்துவிட்டனர். இந்நிலையில் பெருமாள் என்பவருக்கு ஜெயராம் (வாதி) மட்டுமே வாரிசாவார். கிருஷ்ணசாமி, வீரமணியம்மாள் என்பவரை திருமணம் செய்து வாழ்ந்து வந்த நிலையில் வீரமணியம்மாள் குழந்தை பாக்கியமின்றி இறந்துவிட்டார். அதன்பின்பு கிருஷ்ணசாமி செல்வம் அம்மாளை இரண்டாவதாக திருமணம் செய்து மேற்படியார்களுக்கு ரமேஷ் என்ற மகன் பிறந்துள்ளார். இந்நிலையில் , ரமேஷ் என்பவர் 1-ம் பிரதிவாதி நந்தினியை திருமணம் செய்து வாழ்ந்து வந்த நிலையில் ரமேஷ் - நந்தினி தம்பதிக்கு குழந்தைகள் ஏதும் பிறக்கவில்லை. 1-ம் பிரதிவாதி நந்தினியும் 08-07-2019-ம் தேதியில் ஓடிப்போய் வேறொருவரை திருமணம் செய்துகொண்டார். இதனால் மனமுடைந்த ரமேஷ் நோய்வாய்பட்டு இறந்துவிட்டார். மேற்படி கொடிவழி ஜாபிதாவில் கண்டபடி கிருஷ்ணசாமியின் உடன்பிறந்தோர்களில் பெருமாள், செல்லம்மாள், கருணா ஆகியோர்கள் இறந்துவிட்டனர். பெருமாளின் நேரடி வாரிசு இந்த வாதி ஜெயராம் மட்டுமே ஆவார். கிருஷ்ணசாமியின் முதல் மற்றும் இரண்டாவது மனைவியும் இறந்துவிட்டனர். கிருஷ்ணசாமியின் இரண்டாவது மனைவி செல்வம் அம்மாளின் மகனான ரமேஷ் என்பவரும் 10–12–2019–ம் தேதி காலமாகிவிட்டார். இந்நிலையில் செல்வம் அம்மாள் கடந்த 29–09–2021–ம் தேதி intestate ஆக இறந்துவிட்டார். இந்நிலையில் வாதி, கிருஷ்ணசாமியின் மூத்த சகோதரன் மகன் என்பதால் இறுதிக்காலத்தில் செல்வம் அம்மாளை

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.08.29 04:57:52 +0530

தனது பாதுகாப்பில் வைத்து பராமரித்து வந்துள்ளார். செல்வம் அம்மாளுக்கு நேரடி வாரிசுகள் யாரும் உயிருடன் இல்லை. இந்நிலையில் இறந்துபோன செல்வம் அம்மாள் சொத்துக்களை பெயர் மாற்றம் செய்ய வேண்டி வாரிசு சான்றிதழ் தேவைப்பட்டதால் 2–ம் பிரதிவாதியிடம் , வாதி மனுச் செய்துள்ளார். மேற்படி மனுவிற்கு வாதி செல்வம் அம்மாளின் நேரடி வாரிசு இல்லை என்பதால் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ள கூறி 22–08–2022–ம் தேதி குறிப்பாணை வழங்கியுள்ளனர். செல்வம் அம்மாளுக்கு வாதியை தவிர வேறு நேரடி வாரிசுகள் யாரும் இல்லை. எனவே, கடந்த 29-09-2021-ம் தேதி இறந்துபோன செல்வம் அம்மாள் என்பவருக்கு வாதி சட்டப்படியான வாரிசு என்று விளம்புகை பரிகாரம் வழங்கக் கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>2–ம் பிரதிவாதி தரப்பு எதிர் வழக்குரையின் சுருக்கம்</u>:

வழக்குரைச் சங்கதிகளில் வாதி பெருமாளின் மகன் என்றும், பெருமாளின் உடன்பிறந்தவர்கள் கிருஷ்ணசாமி, செல்லம்மாள், கருணா என்றும், அதில் செல்லம்மாளும், கருணாவும் திருமணமாகாமல் இறந்துவிட்டதாக பிராதில் கூறியுள்ள நிலையில், மேற்படி நபர்களின் இறப்பு தேதி பற்றி குறிப்பிடவில்லை. பெருமாள் அவர்களின் தகப்பனார் ராமுகவுடர், தாயார் மாரியம்மாள் என்றும் கூறியுள்ள நிலையில் அவர்களின் இறப்பு விபரங்களையும் வாதி கூறவில்லை. மேலும், கிருஷ்ணசாமியின் முதல் மற்றும் இரண்டாவது மனைவி ஆகியோரின் இறப்பு பற்றியும் கூறவில்லை. 1–ம் பிரதிவாதி ரமேஷிடமிருந்து பிரிந்து வேறொருவரை திருமணம் செய்து கொண்டதாக கூறியுள்ள நிலையில் அந்த வேறொரு நபர் யார் என்பது பற்றி வாதி கூறவில்லை. செல்வம் அம்மாளின் இறுதிச் சடங்கு மற்றும் ஈமக்கிரியைகள் ஆகியவற்றை வாதி செய்தார் என்பதை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். வாதி செல்வம் அம்மாளுக்கு நேரடி வாரிசு இல்லை என்பதால் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று 2–ம் பிரதிவாதி தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.08.29 04:57:59 +0530

**4)** இரு தரப்பு வாதுரைகளையும் பரிசீலித்து 24–11–2022–ம் தேதியில் கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 1 | Whether the plaintiff is entitled to get the relief of declaration as prayed for? |
| 2 | To what other relieves the plaintiff is entitled to ? |

**5)** வாதி தரப்பில் வாதி ஜெயராம் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**6)** 1–ம் பிரதிவாதி தோன்றா தரப்பினராகியுள்ள நிலையில், 2–ம் பிரதிவாதி தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2–ம் பிரதிவாதி தரப்பில் வாய்மொழி சாட்சியம் இல்லை என மேற்குறிப்பு செய்யப்படட்டதன் காரணமாக சாட்சி, சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**7)** வாதி மற்றும் 2–ம் பிரதிவாதி தரப்பு விவாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**8)** **வழக்கெழுவினா 1–க்கான பரிசீலனை மற்றும் தீர்வு:**

| | |
|---|---|
| 1 | Whether the plaintiff is entitled to get the relief of declaration as prayed for? |

வாதி தரப்பு வழக்குரையில், வாதியின் தகப்னார் பெருமாள் அவர்களின் உடன் பிறந்த சகோதர, சகோதரிகளின் பெயர் கிருஷ்ணசாமி, செல்லம்மாள் , கருணா ஆகியோர்கள் என்றும், மேற்படியார்களில் செல்லம்மாள் மற்றும் கருணா ஆகிய இருவரும் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டனர் என்றும், தனது தகப்பனாரைப் பெற்றவர்களான ராமுகவுடர் – மாரியம்மாள் தம்பதியினர் ஏற்கனவே இறந்துவிட்டார்கள் என்றும், வாதியின் தகப்பனாரின் உடன்பிறந்த சகோதரரான கிருஷ்ணசாமி முதலில் வீரமணியம்மாள் என்பவரை திருமணம் செய்து , வீரமணியம்மாளுக்கு குழந்தைகள் இல்லாமல் இறந்துவிட்டார் என்றும், அதன் பின்னர் கிருஷ்ணசாமி, செல்வம் அம்மாளை இரண்டாவதாக திருமணம் செய்து அதன்பலனாக ரமேஷ் என்ற மகன் பிறந்தார் என்றும், இந்த

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.08.29 04:58:08 +0530

நிலையில் வாதியின் தகப்பனாருடன் பிறந்த சகோதரரான கிருஷ்ணசாமி இறந்துவிட்டார் என்றும், அதன் பின்னர் கிருஷ்ணசாமியின் மகன் ரமேஷ் , 1–ம் பிரதிவாதியான நந்தினி என்பவரை திருமணம் செய்து வாழ்ந்து வந்த நிலையில், மேற்படி 1–ம் பிரதிவாதி நந்தினி வேறொரு நபருடன் தொடர்பு கொண்டு வீட்டை விட்டு வெளியேறிச் சென்று, அந்த நபரை திருமணம் செய்து கொண்டு ரமேஷிடமிருந்து பிரிந்து வாழ்ந்து வந்தார் என்றும் , அந்த மன உளைச்சல் காரணமாக ரமேஷ் உடல் நலம் பாதிக்கப்பட்டு இறந்துவிட்டார் என்றும், ரமேஷ் இறந்த பின்னர் , ரமேஷின் தாயாரான செல்வம் அம்மாளை இந்த வாதியே பராமரித்து வந்ததாகவும், இந்த சூழ்நிலையில் செல்வம் அம்மாள் கடந்த 29–09–2021–ம் தேதி இறந்துவிட்டார் என்றும், ஏற்கனவே செல்வம் அம்மாளின் கணவர் கிருஷ்ணசாமி மற்றும் மகன் ரமேஷ் இறந்துவிட்ட நிலையில், ரமேஷின் மனைவியான 1–ம் பிரதிவாதி நந்தினி , ரமேஷ் உயிருடன் இருந்த காலத்திலேயே வேறொரு நபருடன் சென்றுவிட்டட காரணத்தினாலும், பெருமாளின் உடன்பிறந்தவர்களான செல்லம் அம்மாள், கருணா ஆகியோர் திருமணம் ஆகாமல் இறந்துவிட்ட நிலையில், வாதியின் தகப்பனாரும் இறந்துவிட்ட நிலையில், வாதி மட்டுமே இறந்துவிட்ட செல்வம் அம்மாளின் சட்டப்படியான வாரிசாக உள்ளார் என்றும், எனவே, செல்வம் அம்மாள் பெயரில் உள்ள சொத்துக்களைப் பொறுத்து பெயர் மாற்றம் செய்ய 2–ம் பிரதிவாதியான வட்டாட்சியர் அவர்களிடம் வாதி வாரிசு சான்று கேட்டு மனு தாக்கல் செய்ததில், செல்வம் அம்மாளுக்கு வாதி நேரிடை வாரிசு இல்லை என்பதால் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ள குறிப்பாணை வழங்கப்பட்டதாகவும், எனவே, கடந்த 29–09–2021–ம் தேதி இறந்து போன செல்வம் அம்மாளுக்கு வாதி சட்டப்படியான வாரிசு என்று விளம்புகை பரிகாரம் வழங்க கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

9) எதிர்வழக்குரையில் வாதியின் தகப்பனார் பெருமாள் மற்றும் அவருடன் பிறந்த கிருஷ்ணசாமி, செல்லம்மாள், கருணா ஆகியோர்களில் , செல்லம்மாள் மற்றும் கருணா ஆகிய இருவரும் திருமணம் செய்யாமல்

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.08.29 04:58:44 +0530

இறந்துவிட்டார்கள் என்று கூறியுள்ள நிலையில், அவரின் இறப்பு தேதி பற்றி வாதி எந்த விபரமும் கூறிக்கொள்ளவில்லை என்றும், வாதியின் சித்தப்பாவான கிருஷ்ணசாமியின் முதல் மனைவி வீரமணியம்மாள் எந்த தேதியில் இறந்தார் என்பது பற்றியும் வாதி கூறிக்கொள்ளவில்லை என்றும், மேலும் கிருஷ்ணசாமி – செல்வம் அம்மாள் தம்பதியினரின் வாரிசான ரமேஷ் , 1–ம் பிரதிவாதியை எந்த தேதியில் திருமணம் செய்து கொண்டார் என்றும், 1–ம் பிரதிவாதி வேறு நபரை திருமணம் செய்து கொண்டதாக வாதி தரப்பில் கூறியுள்ள நிலையில், அவ்வாறு 1–ம் பிரதிவாதி திருமணம் செய்து கொண்டதாக கூறப்படும் விபரங்கள் பற்றி வாதியால் தெரிவிக்கப்படவில்லை என்றும், மேலும், ரமேஷ் மற்றும் 1–ம் பிரதிவாதி நந்தினி தம்பதியினருக்கு குழந்தைகள் உள்ளதா ? என்பது பற்றிய சங்கதியும் வாதியால் தெரிவிக்கப்படவில்லை என்றும், அதன் காரணாக வாதி நீதிமனற்ம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ள 2–ம் பிரதிவாதியால் குறிப்பாணை வழங்கப்பட்டுள்ளதாகவும், வாதி இவ்வழக்கை தாக்கல் செய்ய எவ்வித வழக்குமூலமும் எழுவில்லை என்றும், எனவே, வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**10)** வாதி தனது வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபிக்கும் விதமாக வா.சா.ஆ.1 முதல் 7 வரையிலான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். வா.சா.ஆ.1 ஆவணமாக கிருஷ்ணசாமியின் இறப்புச் சான்றிதழும், வா.சா.ஆ.2 ஆவணமாக ரமேஷின் இறப்புச் சான்றிதழும், வா.சா.ஆ.3 ஆவணமாக செல்வம் அம்மாளின் இறப்புச் சான்றிதழும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**11)** வாதி தரப்பு வழக்குப் படி வாதி இறந்துவிட்ட செல்வம் அம்மாளின் வாரிசு என்று விளம்புகை செய்ய பரிகாரம் கோரியுள்ளார். இறந்துவிட்ட செல்வம் அம்மாள் வாதியின் தகப்பனாருடன் பிறந்த சித்தப்பாவின் இரண்டாவது மனைவி என்று தெரியவருகிறது. மேற்படி கிருஷ்ணசாமிக்கு ரமேஷ் என்ற மகன் இருந்தார் என்பதும், மேற்படி ரமேஷ் 1–ம் பிரதிவாதியை

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.08.29 04:58:54 +0530

திருமணம் செய்து வாழ்ந்து வந்தார் என்பதும் வாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

**12)** செல்வம் அம்மாள் இறப்பிற்கு முன்பாகவே ரமேஷ் 10–12–2019–ம் தேதியில் இறந்துவிட்டார் என்பதாக வா.சா.ஆ.2 இறப்புச் சான்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. செல்வம் அம்மாள் இறப்பிற்கு முன்பாகவே அவரது கணவரான கிருஷ்ணசாமி (வாதியின் சித்தப்பா) 28–01–2013–ம் தேதியில் இறந்துவிட்டார் என்பது வா.சா.ஆ.1 ஆவணம் மூலமாக தெரியவருகிறது. எனவே, இறந்துவிட்ட செல்வம் அம்மாள் இந்து பெண் என்ற அடிப்படையில் பிரிவு 14, 15, 16 இந்து வாரிசுரிமைச் சட்ட விதிகளின் படி வாரிசுரிமை ஏற்படத்தக்கதாக உள்ளது என்பது சட்டப்படியான தெளிவாகும்.

**13)** பிரிவு 15 இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் கண்ட வாரிசுகளின் இறங்குரிமையின் அடிப்படையிலேயே செல்வம் அம்மாளின் வாரிசுகள் நிர்ணயம் செய்யப்படவேண்டியது சட்டப்படியான அவசியமாகும். அதன்படி செல்வம் அம்மாளின் மகன், மகள் அல்லது இறந்துவிட்ட மகன் அல்லது மகளின் குழந்தைகள், மற்றும் கணவர் ஆகியோர் முதல்நிலை வாரிசுகளாக உரிமை பெறக்கூடியவர்களாக உள்ளனர். இத்தகைய வாரிசுகள் எதுவும் இல்லாத நிலையில், இரண்டாம் நிலை வாரிசுகளில் இறந்து விட்ட செல்வம் அம்மாளின் கணவரான கிருஷ்ணசாமியின் வாரிசுகள் செல்வம் அம்மாளின் வாரிசுகளாக கருதப்பட வேண்டியவர்கள் என்பது தெரியவருகிறது.

**14)** இந்த வழக்கை பொறுத்து வரை இந்து வாரிசுரிமைச் சட்டத்தின்படியான முதல் நிலை வாரிசுகளான மகன், மகள் மற்றும் கணவர் ( முன்னதாக இறந்துவிட்ட மகன் அல்லது மகளின் குழந்கைள் உட்பட ) ஆகியோர் யாரும் செல்வம் அம்மாள் இறந்த நாளில் உயிருடன் இல்லை எனபது வாதி தரப்பு வழக்குப்படி தெரியவருகிறது. வாதி தரப்பு வழக்குப் படி செல்வம் அம்மாளுக்கு முன்னதாக இறந்துவிட்ட ரமேஷ் மற்றும் அவரது மனைவியான 1–ம் பிரதிவாதிக்கு குழந்தைகள் யாரும் உள்ளனரா ? என்பது பற்றி எந்த விபரமும் தெரிவிக்கப்படவில்லை.

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.08.29 04:59:01 +0530

**15)** எனவே, இறந்துவிட்ட செல்வம் அம்மாளுக்கு பிரிவு 15 இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள முதல்நிலை வாரிசுகள் யாரும் இல்லாத நிலையில், இரண்டாம் நிலை வாரிசுகளாக செல்வம் அம்மாளின் கணவர் கிருஷ்ணசாமியின் வாரிசுகள் வாரிசுரிமை பெறக் கூடியவர்களாக உள்ளனர் என்பது தெரியவருகிறது. அதன் அடிப்படையில் கிருஷ்ணசாமியின் வாரிசுகளை நிர்ணயம் செய்யும் விதமாக பிரிவு 8 இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள வாரிசு விபரங்களை பரிசீலனை செய்யப்பட்டதில் பிரிவு 8–ன் கீழான முதல் அட்டவணையில் முதல் வகுப்பு வாரிசுகளாக கூறப்பட்டுள்ள நபர்களில் முன்னதாக இறந்துவிட்ட மகனின் விதவையான 1–ம் பிரதிவாதி உயிருடன் உள்ளார் என்பது தெரியவருகிறது.

**16)** வாதி தரப்பு வழக்கில் செல்வம் அம்மாள் – கிருஷ்ணசாமி தம்பதியினரின் முன்னதாக இறந்துவிட்ட ரமேஷ் உயிருடன் இருந்த காலத்திலேயே அவரது மனைவயிான 1–ம் பிரதிவாதி நந்தினி வேறொரு நபரை திருமணம் செய்து கொண்டு சென்று விட்டார் என்று கூறியுள்ள சங்கதியை தகுந்த சாட்சியங்கள் மூலம் நிரூபணம் செய்ய வேண்டிய கடமையும், பொறுப்பும் வாதிக்கே உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அவ்வாறு நிரூபிக்கும் விதமாக வாதி தரப்பில் எந்த ஒரு ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

**17)** மேலும், 1–ம் பிரதிவாதி வேறொரு நபரை திருமணம் செய்து கொண்டதாக வாதி கூறியுள்ள நிலையில், அவ்வாறு 1–ம் பிரதிவாதி திருமணம் செய்து கொண்ட அந்த நபர் யார் என்பது பற்றி எந்த ஒரு சங்கதியும் வாதியின் வழக்குரையிலோ, அல்லது வாதிதரப்பில் விசாரணை செய்யப்படடுள்ள வா.சா.2, 3 சாட்சியங்களின் மூலமாகவோ கூறப்படவில்லை என்பது தெரியவருகிறது. மேலும், ரமேஷ் இறப்பிற்கு முன்பாகவே 1–ம் பிரதிவாதி வேறொரு நபருடன் ஓடிவிட்டதாக வாதி கூறியுள்ள நிலையில், 1–ம் பிரதிவாதியின் விலாசமாக வழக்குரையில் வாதி வசித்து வரும் மேலக்கூடலூர் கிராமம், வார்டு–17, முத்தையர் தெரு என்ற விலாசத்தையே குறிப்பிட்டு ரமேஷ் மனைவி நந்தினி

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.08.29 04:59:13 +0530

என்று கூறி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

**18)** ரமேஷ் மற்றும் 1–ம் பிரதிவாதிக்கிடையே நடந்த திருமணத்தை வாதி ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், அந்த திருமணம் சட்டப்படி ரத்து செய்யப்பட்டதாக நிரூபணம் செய்ய தவறியுள்ளார் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, செல்வம் அம்மாளின் மகனான ரமேஷின் மனைவியான 1–ம் பிரதிவாதி உயிருடன் உள்ள நிலையில், பிரிவு 15 இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் படியான 2–ம் நிலை வாரிசாக கருதப்படவேண்டிய செல்வம் அம்மாளின் கணவரின் வாரிசுகளில் முதல் நிலை வாரிசாக உள்ள 1–ம் பிரதிவாதி நந்தினி உயிருடன் உள்ள நிலையில், அதற்கு அடுத்த நிலையில் 2–ம் நிலை வாரிசாக 4–வது பதிவில் கண்ட சகோதரரின் மகனான இந்த வாதி தன்னை செல்வம் அம்மாளின் வாரிசாக விளம்புகை செய்ய வேண்டும் என்று கோரியுள்ள பரிகாரம் சட்டப்படி ஏற்புடையதாக இல்லை என்றும், எனவே, வாதி கோரிய விள்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதாக இல்லை என்றும் முடிவு செய்து அவ்வாறே **வழக்கெழுவினா 1–க்கு** தீர்வு காணப்படுகிறது.

**19)** <u>**வழக்கு எழுவினா 2–க்கான பரிசீலனை மற்றும் தீர்வு:**</u>

| | |
|---|---|
| 2 | What other relieves the plaintiff is entitled to ? |

இவ்வழக்கில் வாதிக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் எதுவும் இல்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. செலவுத் தொகை இல்லை. அவ்வாறே **வழக்கெழுவினா 2–க்கு** தீர்வு காணப்படுகிறது.

**20)** இறுதியாக,

| | |
|---|---|
| 1 | அசல் வழக்கு எண். 183 / 2022 தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. |
| 2 | செலவுத் தொகை இல்லை. |

இத்தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.08.29 04:59:21 +0530

செய்து விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 28–08–2023–ம் தேதியில் அவையறிய பகரப்பட்டது.

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.08.29 04:59:30 +0530

***மாவட்ட உரிமையியல் நீதிபதி,***
***உத்தமபாளையம்.***

**<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>**

1. வா.சா.1 ஜெயராம் ( வாதி )
2. வா.சா.2 விஜயா
3. வா.சா.3 கணேசன்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | வா.சா.ஆ.1 | 28–01–2013 | கிருஷ்ணசாமி இறப்பு சான்றிதழ் | அசல் |
| 2 | வா.சா.ஆ.2 | 10–12–2019 | ரமேஷின் இறப்புச் சான்றிதழ் | பதிவிறக்கம் செய்யப்பட்டது. |
| 3 | வா.சா.ஆ.3 | 29–09–2021 | செல்வம் அம்மாளின் இறப்புச் சான்றிதழ் | அசல் |
| 4 | வா.சா.ஆ.4 | 22–08–2022 | 2–ம் பிரதிவாதி வழங்கிய குறிப்பாணை | அசல் |
| 5 | வா.சா.ஆ.5 | – | கிருஷ்ணசாமியின் பெயரில் உள்ள மனைவரி பட்டா | அசல் |
| 6 | வா.சா.ஆ.6 | 19–12–2020 | கிருஷ்ணசாமியின் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது | அசல் |
| 7 | வா.சா.ஆ.7 | – | ஜெயராம்(வாதி) ஆதார் அட்டை | நகல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் – இல்லை.</u>**

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.08.29 04:59:43 +0530

***மாவட்ட உரிமையியல் நீதிபதி,***
***உத்தமபாளையம்.***

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
உத்தமபாளையம்.

**<u>சீரானத் தீர்ப்புரை</u>**
அசல் வழக்கு எண். 183 / 2022
நாள் : 28–08–2023